

# தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் தொழிலாளர் புலம்பெயர்தல் பற்றிய காலாண்டுத் திரட்டு

இரண்டாம் காலாண்டு - 2025

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## *தொழிலாளர் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்களின் அண்மைய அபிவிருத்திகள்*

- ➢ 2025 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதிக்கான மொத்தத் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 5,116.0 மில்லியனாக விளங்கின.
- ➢ 2025 சனவரி தொடக்கம் ஓகத்து வரையான காலப்பகுதிக்கான வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் ஏறத்தாழ 203,901 எண்ணிக்கையாயிருக்குமெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**வரைபடம் 1: தொழிலாளர் பணவனுப்பல்களின் மாதாந்த அசைவு**




*மூலம்: உரிமம்பெற்ற வங்கிகள்*

**வரைபடம் 2: ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி (%)**




*மூலம்: உரிமம்பெற்ற வங்கிகள்*

## *தொழிலாளர் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்களின் அபிவிருத்திகள் (கா2 - 2025)*

- ➢ 2025இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் மொத்தத் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 3,738.0 மில்லியனாக விளங்கின.
- ➢ 2025இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் உயர்ந்தளவிலான பணவனுப்பல்கள் குவைத்திலிருந்தும் அதனைத்தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளிலிருந்தும் கிடைக்கப்பெற்றன.
- ➢ 23,840 தொகையிலான மாதாந்த சராசரியொன்றுடன் 2025இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 143,037 ஆக விளங்கியமையானது 2024இன் முதலாம் அரையாண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

**வரைபடம் 3: நாடு ரீதியான தொழிலாளர் பணவனுப்பல் உட்பாய்ச்சல்கள் (இரண்டாம் காலாண்டு - 2025) (அ)**




*மூலம்: உரிமம்பெற்ற வங்கிகள்*

**குவைத், ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து உயர்ந்தளவிலான தொழிலாளர் பணவனுப்பல்கள் கிடைக்கப்பெற்றன.**

(அ) ஏனைய நாடுகளிலிருந்து 2025இன் இரண்டாம் காலாண்டில் கிடைக்கப்பெற்ற ஐ.அ.டொலர் 218.7 மில்லியன் தொகையானது (ஏறத்தாழ 11.4 சதவீதம்) நாடு ரீதியிலான தொழிலாளர் பணவனுப்பல்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நாடுகளின் முழுமையான பட்டியல் குறித்த விவரங்களைப் பின்வரும் இணைப்பினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்:
https://www.cbsl.gov.lk/en/statistics/statistical-tables/external-sector

(ஆ) எல்லைகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் ஏற்பாடுகள் காரணமாக ஏனைய மூல நாடுகளிலிருந்து மாற்றப்பட்ட பணவனுப்பல்களை ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பவற்றிலிருந்தான பணவனுப்பல்கள் முக்கியமாக உள்ளடக்கின்றன.

**வரைபடம் 4: காலாண்டு தொழிலாளர் பணவனுப்பல்களின் போக்குகள்**




*மூலம்: உரிமம்பெற்ற வங்கிகள்*

**வரைபடம் 5: தொழிலாளர் பணவனுப்பல்களின் மாதாந்தச் சராசரி**




*மூலம்: உரிமம்பெற்ற வங்கிகள்*

**தொழிலாளர் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சலானது 18.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பொன்றுடன் 2024இன் முதலாம் அரையாண்டில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 524.0 மில்லியன் பெறுமதியான மாதாந்த சராசரியொன்றுடன் ஒப்பிடுகையில் 2025இன் முதலாவது அரையாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 623.0 மில்லியன் பெறுமதியான மாதாந்த சராசரியொன்றினைப் பதிவுசெய்தது.**

## *தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான புறப்படுகைகளின் செயலாற்றம்*

**வரைபடம் 6: தொழிலாளர் பணவனுப்பல்கள் எதிர் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான புறப்படுகைகள்**




*மூலங்கள்: உரிமம்பெற்ற வங்கிகள்,*
*இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

**தொழிலாளர் பணவனுப்பல்கள் அண்மைய மாதங்களில் ஆரோக்கியமான மட்டங்களைப் பதிவுசெய்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்வடைந்த மட்டங்களில் காணப்பட்டு, 2025இன் முதலாம் அரையாண்டில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3.7 பில்லியனாக விளங்கின.**

## *தொழிலாளர் புலம்பெயர்வுகளின் அபிவிருத்திகள்*

**வரைபடம் 7: வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான புறப்படுகைகளின் மாதாந்த அசைவு**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

**வரைபடம் 8: சென்றடைந்த பிராந்திய அடிப்படையில் புறப்படுகைகள் (சன - யூன் 2025)**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

**2025இன் முதலாம் அரையாண்டில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான மொத்தப் புறப்படுகைகள் 2024இன் முதலாவது அரையாண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியொன்றினைக் காட்டின.**

**2025இன் முதலாம் அரையாண்டுப்பகுதியில் பெரும்பாலான புலம்பெயர் தொழிலாளர்களின் புறப்படுகைகள் மத்திய கிழக்குப் பிராந்தியத்திற்கானதாகக் (79.5%) காணப்பட்டன.**

**வரைபடம் 9: நாட்டிலிருந்தான காலாண்டுப் புறப்படுகைகளின் போக்குகள்**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

**வரைபடம் 10: நாட்டிலிருந்தான புறப்படுகைகளின் மாதாந்தச் சராசரி**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

## *மனிதவலு மட்டத்தின் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான புறப்படுகைகள்: சன - யூன் 2025*

**வரைபடம் 11: பாலின மற்றும் வேலைவாய்ப்பு வகையின் அடிப்படையில் புறப்படுகைகளின் எண்ணிக்கை (சன - யூன் 2025)**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

**வரைபடம் 12: மனிதவலு மட்டத்தின் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான மொத்த புறப்படுகைகளின் உள்ளடக்கம் (சன - யூன் 2025)**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலாரினதும் நாட்டிலிருந்தான புறப்படுகைகள் தேர்ச்சிப்பெற்ற வகையில் உயர்ந்தளவிலான செறிவுமிக்கதாகக் காணப்பட்டன.

வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான புறப்படுகைகளில் ஏறத்தாழ 76.3 சதவீதம் தேர்ச்சிப்பெற்ற வகையில் செறிவுமிக்கதாகக் காணப்பட்டது.

## *பாலின ரீதியிலான வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான புறப்படுகைகளின் போக்கு: சன - யூன் 2025*

**வரைபடம் 13: பாலின ரீதியிலான நாட்டிலிருந்தான புறப்படுகைகள் (சன - யூன் 2025)**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

## *வயதுக் குழு மற்றும் பாலின ரீதியிலான தொழில்வாய்ப்பிற்கான மொத்த புறப்படுகைகள்: சன - யூன் 2025*

**வரைபடம் 14: வயது மற்றும் பாலின ரீதியிலான தொழில் வாய்ப்பிற்கான மொத்த புறப்படுகைகள்**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

**வரைபடம் 15: பாலின ரீதியிலான தொழில் வாய்ப்பிற்கான மொத்த புறப்படுகைகள்**




*மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்*

ஆண் புலம்பெயர் தொழிலாளர்களின் உயர்ந்தளவிலான சதவீதமானது (19%) 25-29 வயதுக் குழுவினர் மற்றும் 30-34 வயதுக் குழுவினரில் காணப்படுகின்ற வேளையில் அநேகமான பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் (19%) 50இற்கு மேற்பட்ட வயதுக் குழுவில் உள்ளனர்.

## *மொத்த புறப்படுகைகள் (பயணம், வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்கான புறப்படுகைகள் மற்றும் ஏனைய விசா வகைகள் உட்பட) மற்றும் கடவுச்சீட்டு வழங்கல்கள்*

**வரைபடம் 16: இலங்கையர்களின் மொத்த புறப்படுகைகள் (மாதாந்தம்)**




*மூலம்: குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்*

2024இன் முதலாவது அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2025இன் தொடர்புடைய காலப்பகுதியில் மொத்த மாதாந்த புறப்படுகைகள் சிறியளவிலான அதிகரிப்பொன்றினைக் காட்டின.

**வரைபடம் 17: கடவுச்சீட்டு வழங்கல்கள் (மாதாந்தம்)**




*மூலம்: குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்*

கடவுச்சீட்டு வழங்கல்கள் 2024இன் முதலாவது அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2025இன் தொடர்புடைய காலப்பகுதியில் அதிகரிப்பொன்றினைக் காட்டின.

## *இலங்கையரின் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான புறப்படுகைகள் எதிர் மொத்த புறப்படுகைகள்*

**வரைபடம் 18: இலங்கையர்களின் மொத்த புறப்படுகைகளின் சதவீதமாக புலம்பெயர் தொழிலாளர்கள்**




இலங்கையின் மொத்தப் புறப்படுகைகளின் சதவீதமொன்றாகப் புலம்பெயர் தொழிலாளர்களின் புறப்படுகைகள் 2025இன் முதலாவது அரையாண்டில் தளம்பல்களைக் காட்டிய போதிலும் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட மட்டங்களிற்கு அண்மையில் தொடர்ந்து காணப்பட்டன.

குறிப்பு: மொத்த புறப்படுகைகள் இலங்கையரின் மொத்த புறப்படுகைகளை உள்ளடக்கின்றன.